பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

Re-boring Re-grinding
Line Boring etc...

Done within 24 hrs
for all makes of vehicles

GENUINE JAPANESE PISTON LINER KIT SETS AND ENGINE BEARING FOR ALL JAPANESE DIESEL AND PETROL VEHICLES

EDIRISINGHE BROTHERS LTD.
'Auto Court'
567, Prince of Wales Avenue,
Colombo - 14
Tel: 431808, 434012

# உதயன்

விலை ரூபா 3-50

ரீ போறிங், ரீ -
கிரைண்டிங் மற்றும்
லைன் - போறிங்,
போன்றவற்றிற்கு

எந்த வகையான வாகனங்களாயினும் 24 மணி நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
தரமான ஜப்பான் பிஸ்டன், லைனர் கிற் செட்கள், எல்லாவிதமான ஜப்பான் டீசல், பெற்றோல் வாகனங்களுக்குரிய எஞ்சின் பெயாரிங்களும் உண்டு.

எதிரிசிங்க பிரதர்ஸ் லிமிட்டெட்,
"ஓட்டோ கோட்"
567, பிரின்ஸ் ஒப்வேல்ஸ் அவென்யு,
கொழும்பு - 14.
தொலைபேசி - 431808, 434012.

சுடர் 5: பிரமோதூத ஆனி மீ 3 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 23 (17 - 06 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 11 4

# யுத்த நிறுத்தம்!

## கும்புறுமூலையில் மாலை வரை மோதல்கள் நீடித்தன

கிழக்கு மாகாணம் கும்புறுமூலையில் நேற்று மாலை 5 மணி வரை தொடர்ந்து மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கடந்த மூன்று நாட்களாக கும்புறுமூலை இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டிருக்கின்றனர்.

முகாமிற்கான உணவு மற்றும் ஆயுத விநியோகம்நேற்று மாலைவரை துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## விளாங்குளத்தில் தமிழர்கள் வெட்டிக்கொலை

திருகோணமலை மாவட்டத்தில், விளாங்குளம் என்னும் தமிழர் வாழும் கிராமத்தில் புகுந்த ஊர்காவல்படையினர்அங்கு பலரை வெட்டிக் கொலை செய்தனர். என அறியவருகிறது.

கொலையுண்ட தமிழர்களின் எண்ணிக்கை தெரியவரவில்லை.

அதனை அடுத்து இக்கிராமத்தில் வசித்துவந்த சுமார் 300 தமிழ்க் குடும்பங்கள் தம்பலகமம் பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றதாகத் தெரியவந்தது. (ஒ)

## நேற்று மாலை 6 மணி முதல் அமுல்

### மாவட்டத் தளபதிகளுக்கு பிரபா உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

நேற்று மாலை ஆறு மணி முதல் விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்கா படையினரும் யுத்த நிறுத்தம் செய்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஏழு மணி நேரப் பேச்சில் யுத்த நிறுத்தத்திற்கான இணக்க நிலை உருவானது.

இதனையடுத்து யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு எட்டு தமிழ் மாவட்டங்களுக்கும் பொறுப்பான விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தளபதிகளுக்கு, புலிகளின் தலைவர் திரு: வே. பிரபாகரன் உத்தரவு பிறப்பித்தார். இதனை அடுத்து இந்த எட்டு மாவட்டங்களிலும் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் அமைச்சர் ஹமீத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் திட்டமிட்டபடி நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

விடுதலைப் புலிகளின் தரப்பில் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்ப் பகுதிகளில் மூடப்பட்ட பொலீஸ் நிலையங்களைக் காலக்கிரமத்தில் படிப்படியாகத் திறந்து, தமிழ்ப் பொலீஸாரை அங்கு இயங்க

( 3 ஆம் பக்கம் பார்க்க)

## 19 ராணுவச் சிப்பாய்களை மன்னாரில் காணவில்லை

கொழும்பு, ஜூன் 17

தலைமன்னார் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 19 ராணுவச் சிப்பாய்கள் காணாமற் போயினர்.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இதனை அறிவித்தது.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பொலீஸ் நிலையங்களில் ஏழு நிலையங்களை இலங்கை இராணுவம் மீட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் வெரித்தாஸ் வானொலி கூறியது. (உ)

## பாதிப்புற்ற இடங்களுக்கு ஹமீத் புலிகள் செல்வர்

கடந்த ஆறு நாள் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை விடுதலைப் புலிகளின் தலைவர்களும் அமைச்சர் ஹமீத்தும் நாளை திங்கட்கிழமை முதல் நேரடியாகச் சுற்றிப் பார்வையிட்டு அங்குள்ள நிலைமைகள் பற்றி ஆராய்வார்கள்.

— இவ்வாறு நேற்றைய பேச்சுக் குறித்து அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி நிவாரணப் பணிகள் பற்றி இருதரப்பினரும் ஆராய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனைகளை அரசு ஏற்றது

யாழ்ப்பாணம், ஜூன்17

யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் தெரிவித்தநிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அவற்றை உடன் அமுல் செய்ய அரசு உறுதியளித்தது.

இதனை அடுத்து விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு இணங்கினர்.

விடயமறிந்த வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

ஆனால் விடுதலைப்புலிகள் விதித்த நிபந்தனைகள் எவை என்பது குறித்து அவ்வட்டாரங்கள் தகவல் எதுவும் வெளியிடவில்லை.

இதேவேளை -- வடக்கு, கிழக்கில் அரசு இராணுவமுகாம்களில் உள்ளதுருப்பினரைக் குறைக்கஜனாதிபதி பிரேமதாசா அமைச்சர் ஹமீத் மூலம் இணக்கம் தெரிவித்திருக்கிறார் என்று பி. பி. ஸி நேற்று மாலை அறிவித்தது. (உ)

## யாழ் ஆஸ்பத்திரி கண்ணாடிகள் நொறுங்கின

யாழ்ப்பாணம் ஜூன் 17

யாழ். மின்சார நிலைய வீதியில் விழுந்த ஷெல் காரணமாக யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு மேல் மாடியில் பின்பக்கமாக உள்ள யன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியன.

உபதபாற் கந்தோருக்கு முன்பாக உள்ள தபாற்பெட்டியும் முற்றாக சேதம் அடைந்தது. உபதபாலகத்தின் இரும்புக் கதவுகளும் சேதமடைந்தன. (இ-9-10)

## படையினர் 200 பேருக்கு மேல் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 17

கடந்த ஆறுநாட்கள்நடந்த யுத்தத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட படையினர் பலியானதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஏற்பட்ட உயிரிழப்பு பற்றிய முழு விவரமும் இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## நேற்று ஏழு மணி நேரம் பேச்சு இடையில் பிரபாவுடன் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 17

விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும் அமைச்சர் ஹமீத்துக்கும் இடையில் நேற்று ஏழு மணிநேரம் பேச்சுக்கள் நடந்தன.

காலையில் 10 மணிக்கு ஆரம்பமான பேச்சுகள் மாலை 5 மணிக்கே முடிவுற்றன.

பேச்சுக்களின் விபரத்தைத் தெரிந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் திரு மாத்தயாவும், டாக்டர் அன்ரன் பாலசிங்கமும் இடைநடுவில் புறப்பட்டுச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனைச் சந்தித்தனர்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஹமீதின் கண்முன்னால் பலாலியில் டொமினிக்கை நோக்கித் திடீர் சூடு!

### சமயோசிதமாகச் செயற்பட்டுத் தப்பினார்!!

யாழ்ப்பாணம், ஜூன் 17

நேற்றுக் காலை பலாலி வந்து சேர்ந்த அமைச்சர் ஹமீத்தை யாழ்ப்பாணத்தில் பேச்சு நடைபெறும் இடத்துக்கு அழைத்து வருவதற்காகச் சென்ற விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக்கை நோக்கி, வயாவிளான் சென்றியில் இருந்து ஸ்ரீலங்கா படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

திரு. டொமினிக் தெய்வாதீனமாக மயிரிழையில் உயிர் தப்பினார். அவர் சென்ற "பஜரோ'' வாகனம் கடும் சேதமுற்றது.

இந்தச் சூட்டுச் சம்பவம் அமைச்சர் ஹமீதின் கண்ணுக்கு முன்னால் நடந்தது.

இந்தச்சம்பவம்பற்றி அறிய வருவதாவது:-

பலாலி இராணுவ உயர் அதிகாரிகளுடன் ஏற்கனவே "வாக்கிடோக்கி'' மூலம் பேசி இணக்கம் காணப்பட்ட

[3ஆம் பக்கம் பார்க்க]

## கட்டைபறிச்சானில் 40ராணுவம் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 17

திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சானில் உள்ள இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய பாரிய தாக்குதலில் முகாம் முற்றாகத் தகர்ந்தது. 40 இராணுவத்தினர் பலியாகினர்.

பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் மீட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் விடுலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### வாசகர் கவனத்துக்கு!

தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்றைய உதயன் நான்கு பக்கங்களில் வெளிவருகிறது என்பதை வாசகர்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— நிர்வாகி

## முச்சந்தி முரளி



தென்றலும் புயலும் மாறி மாறி வரும் என்டதை மறந்து விடாமல் இருக்க வேணும் பாருங்கோ...!

## யாழ் கோட்டையில் நேற்றுக்காலை மோதல்!

## ஷெல், ஹெலிக்கு பொதுமக்கள் 4 பேர் பலி!!

நேற்றுக் காலை யாழ். கோட்டை ஆயுதப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது.

அப்போது இடம்பெற்ற ஹெலிக்கொப்டர், ஷெல் தாக்குதல்களின் போது நான்கு அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

போராளிகளில் ஒருவர் வீர மரணம் அடைந்தார்.

நேற்றுக் காலை 6 25 மணி அளவில் இச்சண்டை ஆரம்பமானதை அடுத்து ஷெல் தாக்குதல்கள் பரவலாக இடம்பெற்றன. தாக்குதல் ஆரம்பித்த சிறிது நேரத்தில் ஹெலிக்கொப்டர் ஒன்றும் வந்தது. முகிற்கூட்டத்துக்கு மேலாலால் அதி உயரத்தில் நின்று தாக்குதல் நடத்தியது.

யாழ். மின்சார நிலைய வீதியில் "ஷெப்றா''வுக்கு சமீபமாக விழுந்த ஷெல்லினால் இருவரும், சாந்தி தியேட்டருக்குச் சமீபமாக விழுந்த ஷெல்லினால் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

ஹெலித் தாக்குதலின் போது குருநகரைச் சேர்ந்த பெண் ஒருவர் மரணமானார்.

யாழ். நகரப் பகுதியில் மரணமான மூவரில் யாழ். வேம்படி வீதியில் தனியார் டிஸ்பென்சரி நடத்திவந்த டாக்டர் சபாரத்தினமும் ஒருவர்.

ஹெலித் தாக்குதலில் இறந்த குருநகரைச் சேர்ந்த பெண் மேரி கொலஸ்ரிக்கா றப்பியேல் (வயது 22) என்று தெரிவிக்கப்படுகிறது. இவர் குருநகர் சென்றலிஸ்ற் வீதியைச் சேர்ந்தவர்.

இதேவேளை குருநகர் பிறக்கிளமேசன் பாக்ரோட்டில் அதிர்ச்சியால் ஒருவர் மரணமடைந்தார்.

காலை 9. 30 மணிவரை இத்தாக்குதல்கள் இடம் பெற்றன. கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பிரதான வீதியில் பிரதம தபாற் கந்தோருக்கு முன்பாகவும், பஸ்நிலையம், மின்சார நிலைய வீதியிலும், மற்றும் சாந்தித் தியேட்டர், வீரசிங்க மண்டபப் பகுதிகளிலும் விழுந்து வெடித்தன.

ஷெல், ஹெலி தாக்குதல்களில் பலர் காயம் அடைந்து யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர். ஆனால் இவர்களில் பலர் சிகிச்சை அளிக்கப்பட்டவுடன் பீதி காரணமாக வெளியேறி விட்டனர். (இ-9-10-51)

### சுப நேரம்

17 - 6 - 90

ஞாயிற்றுக்கிழமை-ஆனி 3

சுபநேரம்!
08.53 -10.23

இராகுகாலம்
04.23 -05.53

## ஹெலியிலிருந்து குண்டு தாக்குதல்

யாழ்ப்பாணம் ஜூன் 17

யுத்த நிறுத்தம் நேற்று சுமார் ஒருமணித்தியாலத்துக்கு 6 00 மணிக்கு அமுலாவதற்கு முன் கோண்டாவில் பகுதியில் வட்டமிட்ட ஹெலி ஒன்று மூன்று குண்டுகளை வீசியது.

இதற்கு முச்சுன்னாகம் பகுதியில் ஹெலியிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (இ-3)

## யுத்த நிறுத்த மீறல் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 17

நேற்று மாலை 6 மணி முதல் இன்று அதிகாலை இப்பத்திரிகை அச்சுக்குப்போகும் வரை யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

யுத்தநிறுத்தத்தைப் பேணுவதில் இருசாராரும் முனைப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்


## Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [Shabra – Samy & Co அருகாமையில்] (C/4644)

## ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils Cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை, யழ்ப்பாணம். (சி 4726)

## COMPUTER FOR SALE

Commobore 64 pC with Philips 12'' Black and White T. V. Automatic voltage Stabilizer. Single Owner and used less than 100 hours. Price 10,000/- M. Navaratnarajah, 58/1, Kaladdy Amman Road, Jaffna. (13390)

## WANTED

Wants a Lady Accounts Clerk, with a knowledgs of Book-keeping and Typing. Typing is an advantage but not essential. Apply within five days. Thevas Associates, 275, Stanley Road, Jaffna. (3794)

## போட்டோஸ்ரட்

காலை முதல் மாலை வரை மிகவும் தெளிவாகவும், விரைவாகவும் போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கப்படும். நாடுவோர் கிருஷ்ணா பிறவுண் வீதி, (கலட்டி சந்தி) யாழ்ப்பாணம். (C/4745)

## விற்பனைக்கு

புதிய பழைய வீடியோ கசற் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- USHA S. T. S Video Home, Kandy Road, Chavakachcheri. (13394)

அல்சேஷன் 1½ மாதம் ஊசி போடப்பட்ட குட்டிகள் விற்பனைக்கு உண்டு. இ. மகாதேவா, 140, செல்லர் வீதி, கல்வியங்காடு, நல்லூர். (13503)

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீட்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது 200 கிராம் டின் ரூ 150. 00 தேவைக்கு: பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

## English By B. Manjula

The Course [4 Months Programme] Covers 1 Grammar 2 Spe'ling 3 Cholse of words 4 Writing 5 Pronounciation வெளிநாடு செல்வோர்க்கு பொருத்தமானது. ஆரம்பம்; 18-6-1990 21/2, அம்மன் வீதி, சந்தர்மடம். (13441)

## தேவை

மூன்று பேர் கொண்ட சிறு குடும்பத்திற்கு மாநகரசபை எல்லைக்குள் ஒரு பகுதி வீடு அல்லது முழு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 32, பிரப்பன் குளம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (13504)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி சந்திரசேகரராஜா வசந்தாதேவி
(காலஞ்சென்ற ஓவசியர் சந்திரசேகரராஜாவின் அன்பு மனைவி)

தோற்றம்: 19-3-1927 மறைவு: 18-5-1990

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் எங்களை வழிநடத்திய எங்கள் அன்புத் தாயே உங்கள் மறைவை தாங்க முடியாமல் தவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

''திருவேரகம்''
காட்டுப்புலம்,
தொண்டமனாறு. (3841)

# வைத்தியசாலை அபிவிருத்திக்கு நிதி

பச்சிலைப்பள்ளி ஜூன் [17 பச்சிலைப்பள்ளியிலுள்ள முப்பத்திரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பளை வைத்தியசாலை அபிவிருத்திக்கென ரூபா ஐந்நூறு வீதம் வழங்க இருப்பதாக அறியப்படுகிறது. (இ-117)

# REMEMBRANCE



S. T. CHARI

BORN:- 01 - 02 - 1923

DIED:- 17 - 06 - 1987

Remembred Today and Every day
Sadly Missed and Deeply Mourned by

Family & Friends.

Sangarapillai Road,
Manipay. (3854)

# Licensed Surveyors' Association, Northern Division

Members are hereby infromed that the Special General Meeting fixed for the 20th instant is postponed.

C. Sandrasegara.
Hony. Secretary.
(13506)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இராசரத்தினம் பசுங்கிளி

தோற்றம்: 28 - 02 - 1935 மறைவு: 17 - 06 - 1988

இன்னுயிரை ஈந்து
ஈராண்டு சென்றதம்மா
தாயே தனியான பாதையில்
தனி வழி சென்றாயோ
நீ வருவாய் என்று நாம்
போன பாதை பார்த்திருந்தோம்
சூடுபட்டு வீழ்ந்த போது
சூழ்ந்து நாம் நிற்கவில்லை
மயங்கிச் சரிசையிலே
மார்போடும் அணைக்கவில்லை
மாசி வெள்ளி நீ பிறந்தாய்
ஆனி வெள்ளி நீ மறைந்தாய்
பாசமுள்ள பிள்ளைகள் அறுவரையும்
தவிக்கவிட்டுத் தனியாக உன்னுயிரை ஈந்தாயோ

உங்கள் பிரிவை எண்ணி வாடும்:
தாய், கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பெறாமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

6 ஆம் வட்டாரம்,
மயிலிட்டி. (3867)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. கந்தையா தியாகராசா

தோற்றம்: 09-04-1932 மறைவு: 18-05-1990

எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தந்தையே! உம்மையும் உமது செயல்களையும் நினைந்து பரிதவிக்கின்றோம். எம் தவிப்பை எப்போது தீர்ப்பாய் ஐயா.


உமது பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர்மார், மைத்துனிகள்,
சகலன்மார், சகோதர சகோதரிகள்.

அன்னாரது மரணச் சடங்கில் கலந்து கொண்டு உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு 17 – 06 – 90 ஞாயிற்றுக்கிழமை இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு. (13505)

# முதலாம் வருட நினைவு அஞ்சலி!



ஜோசப் அன்டனி அய்யாராஜ் பெர்னான்டோ

பிறப்பு: 19 - 03 - 1933 இறப்பு: 17 - 06 - 1989

அன்பினால் எம்மை ஆட்சி செய்து
ஆல விருட்சமாய் எங்களுக்கு நிழல் தந்து
ஈகைக்கு இலக்கணமாகத் திகழ்ந்து
ஊர் உலகிற்கும் உறவினர்க்கும் உத்தமராய் வாழ்ந்து
பாசத்துடன் எமை வளர்த்து
பாதியிலே எம்மையெல்லாம் விட்டுச் சென்ற
எங்கள் அணையாத சோதி என்றும் எளிமையானவர்
அய்யாராஜ் என்ற உங்கள் நாமம்
ஓயாது ஒலிக்குதையா செவிகளிலே
ஓடிமறைந்ததையா ஒரு வருடம்

உங்களை மறவாமல் துயருறும்
பாதியிலே பறிகொடுத்த மனைவி,
பாசத்தை உணர முன்னே உங்களை
இழந்த மக்கள், மற்றும் சகோதரிகள், சகோதரர்கள்,
மைத்துனர், மைத்துனிமார், உற்றார், உறவினர்கள்.

82, கல்லூ[illegible]
கொட்டா[illegible]
கொழும்[illegible] [சி-4802]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் உயர்திரு
நாகரெத்தினம் இராசநாயகம்

தோற்றம்: 05 – 05 – 1922 மறைவு: 18 – 05 – 1990

திதி: 17 - 06 - 1990

அன்புருவே அமுதமொழி எம் தலைவா
அனவரத மையா இங்கு
உன்புகழே நடமாட நீ மறைந்த
நினைவதனை உலக மீது
என்றுமினி மறக்குவமோ என் ராசா
நாயகமே இன்ப ஊற்றே
இன்றெமது சிரந்தாழ்த்தி உனதான்மா
சாந்தியுற இறைபாதம் ஒத்துவமே!

உங்கள் நினைவால் வருந்தும்;
திருமதி இ. இராசமணியும்,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

திருமதி இ. இராசமணி,
'சந்திரிகை'
சிவகுல வீதி, உரும்பராய். (13502)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யாருடன் போர்?

கிழக்கில் மூண்ட யுத்தம் வடக்கிற்கும் பரவி இருந்தது. தமிழ்ப்பிரதேசங்களில் மீண்டும் முழு அளவில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. சமாதானப் பேச்சு என்ற நிலை மாறி யுத்தம் என்ற நிலையே நேற்று மாலைவரை மேலோங்கி நின்றது.

யுத்தம் என்பது ஒரு பக்கத்துக்கு வெற்றி மறுதரப்புக்குத் தோல்வி என்ற புள்ளி எய்தப்படும்வரை ஓயாது. இரு தரப்பாரும் தமது பலத்தைக் காட்டுவதற்காகப் போராடுவார்கள்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் குரல் தர வல்ல அதிகாரமுடையவராக விளங்கும் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தான் யுத்தம் என்று தெரிவித்தார் ஏதோ ஒரு விதத்தில் உத்தியோகப்பற்ற முறையில் யுத்தத்தைப் பிரகடனம் செய்தார்.

விடுதலைப் புலிகளை நாங்கள் பகைவர்களாகக் கருதவில்லை என்றவர்-

எந்தப் பிரச்சனையையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கத் தயாராக இருக்கிறோம் என்றவர்-

அடுத்த நிமிடமே, அதே வாயால் புலிகளுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தார்.

அதே போல, உதிர்ந்த வார்த்தையை விழுங்கும் தனது தன்மையைத் தனது படைகள் மூலம் தமிழ்ப்பகுதிகளில் செயலில் செய்து காட்டினார்.

இப்போதைய நிலைக்குத் தமிழ் மக்கள் எந்த விதத்திலும் பொறுப்பாளிகள் அல்லர் என்று கூறிவிட்டு —

வடக்கு - கிழக்கில் வாழும் ஆயுதம் இல்லாத அப்பாவித் தமிழ் மக்களை வானத் தாக்குதல்கள் நடத்தி, தமது படைகளைக் கொண்டு, கொன்று குவித்து விட்டார்!

முந்திய லலித்தார் ஒரு அடி பாய்ந்திருந்தால், தான் ஒன்பது அடி பாய வேண்டும் என்று இப்போதைய ரஞ்சன் நினைக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் புரிபவர் ஏன் தமிழ் மக்களை பொம்மராலும், ஷெல்லாலும், ஹெலியாலும் தாக்கிக் கொல்ல வேண்டும்? இடையில் பொதுமக்கள் அகப்பட்டு இறப்பதைத் தவிர்க்க முடியாது என்ற நொண்டிச் சாட்டு ஏன்?

சிங்களப் பகுதிகளில் ஜே.வி.பியினருடன் போர் நடத்தியபோது, அரசினர் சிங்களப் பொதுமக்களைப் பொம்மராலும், ஹெலியாலும் தாக்கிக் கொன்றார்களா? இல்லை! வெகு கவனமாக ஜே.வி.பி.யினருடன் மட்டுமே மோதினார்கள்.

தமிழ்ப் பிரதேசம் என்றதும் கண்டமாதிரி, பரவலாக, மக்கள் வாழும் பகுதிகளில் வானத்தாக்குதல் நடத்தித் தமிழர்களை அழிப்பதே அரசின் நோக்கமாக இருக்கிறது எனவே ரஞ்சன் அறிவித்த போர், தமிழ மக்களுக்கு எதிரான போர் என்பதில் ஐயம் கொள்ள எதுவுமில்லை.

கடந்த புதன்கிழமை இரத்மலானையில் வைத்து வடக்குக் கிழக்குக்கெனத் துருப்பினரையும் படைக்கலன்களையும் அரசு அனுப்பியதல்லவா? அவற்றின் கனபரிமாணங்களை அறிந்த வெளிநாட்டு ராஜதந்திரிகள் இவர்கள் தமது சொந்த நாட்டில் போர் நடத்தவா இவை எல்லாவற்றையும் அனுப்புகிறார்கள் என்று மூக்கில் விரல் வைத்தார்களாம்!

சர்வதேச மட்டத்தில் இரண்டு நாட்டுப் படைகள் யுத்தம் புரியும்போதுதான் குண்டுவீச்சு நடத்துவது வழக்கம். ஆனால் இங்கு உள் நாட்டு யுத்தத்திலும் குண்டு வீச்சு வழக்கமாகி விட்டது.

அதுவும் தமிழ்ப் பகுதியில் மட்டும் தான் என்பதை வெளிநாட்டு ராஜதந்திரிகள் இப்போது தெரிந்துகொண்டிருப்பார்கள். அரசாங்கம் போர் நடத்துவது புலிகளோடு மட்டுமல்ல தமிழர்களுக்கு எதிராகவும்தான் என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

---

ஜனநாயக முறைக்கு எதிராக நடந்தால்

# ஜே. வி. பிக்கு ஏற்பட்ட கதியே புலிகளுக்கும்!

## கண்டிக் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன். 17

மக்களுக்கும் ஜனநாயக முறைக்கும் எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நடந்துகொள்வார்களேயானால் ஜே. வி. பியினருக்கு நேர்ந்த கதி தான் அவர்களுக்கும் நேரும்

கண்டியில் நேற்று (சனிக்கிழமை) நடந்த கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸா இப்படித் தெரிவித்தார்.

ஜனாதிபதி மிகவும் உணர்ச்சி வசப்பட்டவராகவும், ஆக்ரோஷமாகவும் இந்தஉரையை நிகழ்த்தினார்

ஜனாதிபதி தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் சண்டை தமிழ் மக்களுக்கும் சிங்களமக்களுக்கும் இடையிலான போராட்டமல்ல.

நாகரீகம் படைத்த சமூகம் ஒன்றுக்கும் அநாகரீகமான சமூகம் ஒன்றுக்கும் இடையிலான சண்டையே.

தேசிய சமாதானத்தை நிலைநாட்ட அனைத்துச் சமூகங்களும் கூட்டாகச் செயற்படவேண்டும்.

வடக்கு - கிழக்குப் பகுதி மக்களை அவல நிலையில் இருந்து பாதுகாக்க அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

அரசு மேற்கொள்ளும் திட்டம் காரணமாக இலங்கை நீதி வழி நடக்கும் ஒரு நாடு என்று உலக அரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது.

நாட்டின் தேசிய அபிவிருத்தியைப் பாதித்து பிரிவினை வாதம் வளர்வதற்கு இனத் தகராறு காலாக அமைந்தது. பிரிவினைவாத இயக்கத்துக்கு வெளிநாட்டில் இருந்து உதவி கிடைத்தது.

நாட்டில் பிளவுகள் நிலவியதால் பிரிவினை வாதம் தோன்றி இந்தியத் துருப்புக்களின் வருகைக்கும் வித்திட்டது.

இந்தச் சூழ்நிலையில் இளைஞர்களைத் தவறான பாதையில் வழிநடத்தி பயங்கரவாதம் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தலை தூக்கியது.

வடக்கு-கிழக்குப் பகுதியில் ஒருதலைப்பட்சமாக தமிழீழப் பிரகடனம் செய்யப்பட்டதனால் ஈ.பி ஆர். எல் எவ். இயக்கம் அதன் அதிகாரத்தை இழந்தது.

தேர்தலில் பங்குகொள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் முன்வந்தனர். அதனால் அந்த இயக்கத்துடன் இணைந்தகான புதிய கட்சி ஒன்று பதிவு செய்யப்பட்டது.

### ஜூலை 5 இல் அறிவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான திகதி பற்றி எதிர்வரும் ஜூலை மாதம் 5 ம் திகதி நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும்.

இந்த நிலையில் மட்டக்களப்பில் நடந்த சிறு சம்பவம் ஒன்றைக் காரணமாக வைத்து விடுதலைப் புலிகள் அந்தப் பிராந்தியத்தில் இராணுவ முகாம்கள் மீதும் பொலீஸ் நிலையங்கள் மீதும் தாக்குதல்களை நடத்தத் தொடங்கினர்.

சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் பாதுகாப்புப் படையினர் இன்னும் குறைந்த மட்டத்திலேயே தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

### தற்காலிகமாக கைவிடப்பட்டன

இதன் காரணமாக குடிமக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களும் பொலீஸ் நிலையங்களும் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்காது, ஜனநாயகத்துக்கு மாறாக நடந்தால் நாட்டு மக்களையும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழ்பவர்களையும் கஷ்டங்களுக்கு உள்ளாக்குவார்களேயானால், இதே விதமான சூழ்நிலையில் ஜே. வி. பி யினருக்கு நேர்ந்த கதியை எதிர்நோக்குவதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

நாட்டின் உண்மைநிலையை அறிந்து, பயங்கரவாதத்தின் மூலம் தமது குறிக்கோள்களை அடைய முயலும் குழுவினரைத் தோற்கடிப்பதற்கு இலங்கை எடுத்துவரும் முயற்சிகளை ஆதரிக்குமாறு முழு உலகுக்குமே நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

### வெற்றி பெறுவார்கள்

இந்த சூழ் நிலையில் பாதுகாப்புப் படையினர் வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதாகப் பொய்ப் பிரசாரம் ஒன்று மேற்கொள்ளப்படுகிறது. மக்களைத் தூண்டி விடுவதே இத்தீய முயற்சியின் நோக்கமாகும்.

பாதுகாப்புப் படையினர் தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் பொறுமையுடன் நடந்துகொள்கிறார்கள், அவர்கள் வடக்கு, கிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதில் வெற்றி பெறுவார்கள் என்று நம்புகின்றேன். -இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்தார். (அ-எ)

---

# குடும்பத்தோடு புறப்பட்டவேளை பொம்மர் குண்டுவீசித் தாக்கியது

## மனைவியையும் மகனையும் இழந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

எமது பகுதியில் நிலவிய பதற்றம் காரணமாக குடும்பத்துடன் ஊரைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தோம். அப்பொழுது பொம்மர்ஒன்று வட்டமிட்டது- அது வீசிய குண்டு எனது மனைவி மகன் ஆகியோர் நின்ற இடத்தில் விழுந்து வெடித்தது. மனைவி அதே இடத்தில் இறந்தார், மகனை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்றேன். ஆனால் அவரும் இறந்துவிட்டார்.

மயிலிட்டியில் பொம்மர் தாக்குதலில் சிக்கிய வடிவழகன் (40 வயது) மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

மயிலிட்டி நாவலடியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு நடைபெற்ற பொம்மர் தாக்குதல் சம்பவம்பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

மயிலிட்டிப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியதை அடுத்து நாம் குடும்பத்துடன் புறப்பட்டோம்.

எமது வீட்டில் இருந்து புறப்பட்டுச் சொற்ப தூரம் செல்ல பொம்மர் ஒன்று வட்டமிட்டது. நானும் எனது மூத்த இரு பிள்ளைகளும் ஒரு கோயிலில் புகுந்தோம். எனது மனைவியும் மகனும் [6வயது] இனத்தவர்களும் பக்கத்தில்உள்ள மதில் ஒன்றில் பதுங்கினார்கள்.

அச்சமயம் பொம்மர்குண்டு ஒன்றை வீசியது. அந்தக் குண்டு அவர்கள் நின்ற இடத்தில் விழுந்து வெடித்தது. மனைவி மயக்கமுற்று இறந்தார்.

மகன் பிரபாகரனைத் தோளில் போட்டபடியே வைத்தியசாலைக்குஓடினேன். வைத்தியசாலையை அடைந்தபோது அவர் மரணமானார்.

இப்படி வடிவழகன் கூறினார். [இ-3]

---

# கிழக்கு மக்களுக்கு உதவ நிவாரண நிதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 17

கடந்த ஆறு நாட்களாக நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு உதவுவதற்காக உடனடியாக நிவாரண நிதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக தமிழ்ப்பகுதிகளில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட— இடம் பெயர்ந்த மக்களுக்குரிய உடனடி நிவாரணங்களை மேற்கொள்வது பற்றி நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அரசுசார்பற்ற பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த விசேட கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பொதுமக்களின் அவல நிலை குறித்து அனைவரும் தமது உணர்ச்சி பூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர். ஒருங்கிணைந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் அவர்கள் முடிவுசெய்தனர்.

முதற்கட்டமாக கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உடனடியான நிவாரண நிதியொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்படி நிதி மூலம் கிழக்கில் நிவாரண வேலைகளை உரியவர்கள் மூலம் நாடும் பொறுப்பு தமிழீழ ஆய்வு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

வடக்கில் மருத்துவ, மற்றும் இடம்பெயர்ந்தோர் பராமரிப்பு பணிகளை சகல ஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து உடனடியாக ஆரம்பிப்பதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது

சகல பொது ஸ்தாபனங்களும் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருப்பதென்றும், தேவைப்படும் பட்சத்தில் உடனடியாகச் சந்தித்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் [illegible] தீர்மானிக்கப்பட்டது. [அ]

---

காயம் அடைவோர் சிகிச்சை பெற

# அனுராதபுரம் - பொலநறுவை ஆஸ்பத்திரிகளில் மேலதிக வசதி

கொழும்பு ஜூன் 17

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றுவரும் அசம்பாவிதங்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க மேலதிக வசதிகள் அனுராதபுரம், பொலன்னறுவை ஆஸ்பத்திரிகள் செய்து கொள்ளப்பட்டுள்ளன.

மேலதிக டாக்டர்களுடன் மருந்து வகைகள் மற்றும் உபகரணங்கள் அனுராதபுரம் பொலன்னறுவை ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விசேஷ இரத்த [illegible] இந்த ஆஸ்பத்திரிகளில் திறக்கப்பட்டுள்ளன, [இ-எ]

## பம்பாயில் பெரு மழை

பம்பாய், ஜூன் 17

இந்த நூற்றாண்டிலேயே மிக மோசமான மழை நேற்று பம்பாய் நகரில் பெய்தது.

இதனால் பம்பாய் நகரமே ஸ்தம்பிதமடைந்தது ரயில், பஸ்சேவைகள் சீர் குலைந்தன. தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. (இ-எ)

---

# வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து சிங் - கருணாநிதி இன்று சந்திப்பு

சென்னை, ஜூன் 17

இலங்கை, வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நெருக்கடி குறித்து தமிழக முதலமைச்சர் கருணாநிதி இன்று (ஞாயிறு) புதுடில்லியில் பிரதமர் வி. பி. சிங்கைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்துவார்.

திரு. கருணாநிதி நேற்று இத் தகவலை செய்தியாளரிடம் தெரிவித்தார்.

''இலங்கைநிலைமைகுறித்து நேற்றும் (வெள்ளி) இன்றும் (சனி) பிரதமர் சிங் தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டார். நாளை (ஞாயிறு) பிரதமரைச் சந்திக்க உள்ளேன். புதுடில்லியில் இருந்து திரும்பிய பின்னர், தேவையானால் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சிகளின் மாநாடு ஒன்றைக் கூட்டுவேன்.''

இப்படி திரு. கருணாநிதி சொன்னார்.

காயமடைந்த விடுதலைப் புலிகள் போராளிகள் சிலர் திருச்சியில் வீடுகளில் தங்கியிருந்ததை வைத்து தமிழ் நாட்டில் பயிற்சி முகாம் இருப்பதாகக் கூறிவிட முடியாது — என்று திரு. கருணாநிதி கூறினார். (இ-எ)

## இன்றைய போட்டிகள்

மிலான், ஜூன் 17

இன்று நடைபெற உள்ள உலகக்கிண்ண [உதைபந்தாட்டப் போட்டிகள் வருமாறு;

'ஈ' பிரிவு

பெல்ஜியம் எதிர் உருகுவே (இடம்: வெரோனா) தென் கொரியா எதிர் ஸ்பெயின் இடம்: யுடீன்)

'எப்' பிரிவு

அயர்லாந்துஎதிர் எகிப்து (இடம்; பலேர்மோ)

(ஒ-எ)

# ஆறு எதிர்க்கட்சிகள் சேர்ந்து கூட்டறிக்கை

கொழும்பு ஜூன் 17

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படுவதற்கு இணையுமாறு அரசாங்கத்தையும் ஏனைய சகல கட்சிகளையும் கோரும் அறிக்கை ஒன்றை சுதந்திரக் கட்சி தலைமையில் ஆறு எதிர்க்கட்சிகள் விடுத்துள்ளன.

அந்தக் கூட்டறிக்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய சோஷலிச முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் ஐக்கிய முன்னணி, ஈ.பி.ஆர். எல். எவ், ரெலா ஆகியவை சேர்ந்து நேற்று முன்தினம் வெளியிட்டன.

இவ்வாரம் நடந்த சம்பவங்களை மிகுந்த கவலையுடன் தாம் நோக்குவதாக அந்தக் கட்சிகள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளன.

அதே வேளை பிரதமர் திரு டி. பி. விஜேதுங்கா, பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா ஆகியோர் நேற்று இந்த ஆறு கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தி அரசின் நிலைப்பாட்டை விளக்கினர். [அ]

# மயிலிட்டி - காங்கேசன்துறை பகுதிகளில் காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், ஜூன் 17

மயிலிட்டி, காங்கேசன் துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவும், நேற்றும் இடம் பெற்ற ஹெலித் தாக்குதல்களில் 12பேர் படுகாயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விவரம் வருமாறு:-

1. கந்தையா சேகர் (18 வயது) - கட்டுவன், சண்முகநாதன் சிவபாக்கியம் (42 வயது) மயிலிட்டி தெற்கு, 3. சண்முகநாதன் சிவரதி (14 வயது) – மயிலிட்டி தெற்கு, 4. சிவானந்தன் பற்றிக்ஸ் – கோப்பாய் வடக்கு, 5. ஜேசுதாசன் குணத்தினம் (24 வயது) -மயிலிட்டி வடக்கு, 6. சுப்பிரமணியம் கஜேந்திரன் (29 வயது)- காங்கேசன்துறை, 7. சிவப்பிரகாசம் ஜெயசூர் (30 வயது) – மயிலிட்டி தெற்கு, 8. பொன்னையாமார்க்கண்டு (52வயது) -ஏழாலை வடக்கு, 9. நடராசா பூபாலசிங்கம் (30 வயது)- ஏழாலை வடக்கு, 10. தாசன் நிசாந்தன் (1½ வயது)- மயிலிட்டி தெற்கு, 11. தாசன் சாந்தன் (1 வயது) மயிலிட்டி தெற்கு. (இ-68-3)

## யுத்த நிறுத்தம்---

அனுமதிக்கவும் இந்தப் பேச்சுக்களின் போது இணக்கம் காணப்பட்டது.

விடுதலைப்புலிகளிடம்சரணடைந்த பொலீஸார்கள் விடுதலை செய்யப்படுவார்கள். இது சம்பந்தமாக இரு தரப்பினரும் தொடர்ந்து பேசுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

காயமடைந்த இராணுவத்தினரை வைத்திய வசதிக்காக இடமாற்றம் செய்யவும்—

முற்றுகையிடப்பட்ட இராணுவ முகாம்களுக்கு மருந்து மற்றும் உணவு வகைகளை அனுப்பி வைக்கவும் விடுதலைப்புலிகள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று பேச்சுககளின் போது உறுதியளிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் தேவைப்படின் மனித உரிமை ஸ்தாபனங்களின் உதவியை அரசு நாடலாம் என்றும் இணக்கம் காணப்பட்டது.

ஏனைய முக்கிய விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளின் மூலம் முடிவு சாண்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அமைச்சர் ஹமீத்தும் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்களும் சகல மாவட்டங்களுககும் விஜயம் செய்து சமாதானத்தையும் சகஜ நிலையையும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றும் இணக்கம் காணப்பட்டது. (உ)

## நேற்று ஏழு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஒருமணிநேரம் திரு. பிரபாகரனுடன் ஆலோசனை நடத்திய பின்னர் மேல் விவரங்களை அறிந்து கொண்டு அவர்கள் பேச்சுககுத் திரும்பினர்.

இந்த வேளையில் அமைச்சர் ஹமீத் தொலைபேசி மூலம் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ்மா அதிபர் ஆகிய தமது தரப்பினருடன் தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தினார். [உ]

# கட்டடம் இடிந்து விழுந்ததில் 100 மாணவர் நசியுண்டு பலி?

லேகோஸ், ஜூன் 17

நைஜீரியாவில் தென்கிழக்கு நகர் ஒன்றில் இரண்டு மாடிப் பாடசாலைக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் சுமார் நூறு மாணவர்கள் நசியுண்டு இறந்து விட்டனர் என்று அஞ்சப்படுகிறது.

சுமார் 80 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வகுப்புக்கள் நடந்து கொண்டிருந்த சமயம் இத்துக்ககரமான சம்பவம் இடம்பெற்றது.

அந்த இரண்டு மாடிக் கட்டடத்தில் மூன்றாவது மாடியைக் கட்டும் வேலைகள் அப்போது நடந்து கொண்டிருந்தன. (ஒ-எ)

## கிரிக்கெட் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

''டொனால்ட் கணேசகுமார்'' வெற்றிக் கிண்ணத்துக்காக இன்று நடைபெறவிருந்த கிரிக்கெட் போட்டி மறு அறிவித்தல் வரை ஒத்திப்போடப்பட்டிருக்கிறது.

இச்சுற்றுப் போட்டியை நடத்திவரும் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் இத்தகவலைத் தெரிவித்தார். (உ)

## மந்திரி மாற்றம்

சென்னை, ஜூன் 17

தமிழக அமைச்சரவையில் ஆதிதிராவிட அமைச்சராக இருந்த திரு. இராமகிருஷ்ணன் நீக்கப்பட்டு அவரின் இடத்திற்கு திரு. எஸ். சுந்தரம் நியமிக்கப்பட்டார்.

முதலமைச்சரின் சிபாரிசின் மீது ஆளுநர் இந்த மாற்றத்தைச் செய்தார். [அ எ]

# ஹமீதின் கண்முன்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் காலை 9.30 மணி அளவில் ஜனாப். ஹமீத்தை அழைத்து வருவதற்காக திரு. டொமினிக் பலாலி சென்றார்.

அவருடன் அவரது உதவியாளர்கள் இருவர்கூடச்சென்றனர்.

தமது 'பஜரோ'' வாகனத்தில் வயாவிளானில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவ சென்றியை நோக்கிச் சென்ற திரு டொமினிக், சென்றிக்குச் சுமார் 50 யார் தூரத்தில் தமது வாகனத்தை நிறுத்தி விட்டு. வாகனத்திலிருந்து இறங்கினார்

அவ்வேளை பலாலிப் பக்கத்திலிருந்து வயவிளான் சென்றியை நோக்கி — சென்றிக்கு சற்றுப் பின்னால்—அமைச்சர் ஹமீத் இராணுவ அதிகாரிகளுடன் நடந்து வந்துகொண்டிருந்தார்.

### திடீரெனச் சுட்டனர்

அப்போது சென்றியிலிருந்த இராணுவச் சிப்பாய்கள் திடீரென 30 கலிபர் துப்பாக்கியினால் திரு. டொமினிக்கை நோக்கி சரமாரியாகச் சுட்டனர்.

வேட்டுச் சத்தம் கேட்ட மறுகணம் திரு. டொமினிக்கும் அவருடன் கூட வந்தவர்களும் தமது வாகனத்துக்கு அருகே நிலத்தில் விழுந்து படுத்து பாதுகாப்பான இடத்துக்கு உருண்டு சென்றனர்.

திரு. டொமினிக்கின் வாகனம் பலத்த சேதமுற்றது.

அமைச்சர் ஹமீத் தலையிட்டதை அடுத்து துப்பாக்கிப்பிரயோகம் நிறுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்தது குறித்து திரு டொமினிக்கிடமும், விடுதலைப் புலிகளின் தலைவர்களிடமும் அரசாங்கத்தின் தரப்பில் அமைச்சர் ஹமீத்தும் பிரிகேடியர் நமுனியும் மன்னிப்புக் கோரியதாகப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆத்திரமூட்டும் சம்பவம் இடம்பெற்ற போதிலும் அரச படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் ஏதும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் திரு டொமினிக், அமைச்சர் ஹமீத்துடன் சிரித்துப் பேசியவாறு அவரை வேறு வாகனம் ஒன்றில் அழைத்து வந்தார்.

திரு. டொமினிக்கின் வாகனம் வயாவிளான் சென்றிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பிறிதொரு வாகனத்துடன் கட்டி இழுத்துவரப்பட்டது. (அ-உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




பி. ஐ. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.



# உதயன்

17 - 06 - 1990 ஞாயிற்றுக்கிழமை






கிளை: பி. ஐ. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.


## மாங்குளம் முகாம்மீது திடீர் தாக்கு!
## 12 விடுதலைப் புலிகள் வீரமரணம்!!

யாழ்ப்பாணம், ஜூன் 17

நேற்று சனிக்கிழமை அதிகாலை மாங்குளம் இராணுவ முகாம்மீது திடீர்த்தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலைவரை சுமார் ஐந்து மணி நேரம் நீடித்த இந்த தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தரப்பில் 12 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

தாக்குதலின் போது இராணுவத்தினரின் காவல் அரண்களைத் தகர்த்துக் கொண்டு முகாம்களுக்குள் புகுந்த விடுதலைப்புலிகள் அங்கிருந்து பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றினர். (உ-10)

### பலாலிச் சம்பவம்
## 8 ஆவது நபரும் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம் ஜூன் 17

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பலாலியில் இடம்பெற்ற மோதலை அடுத்து ஹெலிக்கொப்டர் தாக்குதலினால் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் நேற்று மரணமானார்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எழுவர் மரணமானார்கள். நேற்று மரணமானவர் அந்தக் குடும்பத்தில் எட்டாவது உறுப்பினர் ஆவார்.

மயிலிட்டியைச் சேர்ந்த சிவதாசன் தேவமலர் (வயது 40) என்பவரே நேற்று உயிரிழந்தவர். (இ-10-9)

### ரி. வி. யில் பிரபா

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நேற்றுத் தொலைக்காட்சியில் தோன்றினார்.

நிதர்சனம் ஒலிபரப்பு சேவையின் பரீட்சார்த்த ஒளிபரப்பில் திரு. பிரபாகரன் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு காண்பிக்கப்பட்டது.

அதனால், திரு பிரபாகரன் பத்திரிகையாளர்களுடன் சிரித்துப் பேசி அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்ததை மக்கள் நேரில் காணும் வாய்ப்பு ஏற்பட்டது.

நிதர்சனம் பரீட்சார்த்த ஒளிபரப்பு தினமும் இரவு ஏழு மணிக்கு ஆரம்பமாகிறது.

## ஹாபர்வியூ ஹோட்டல் கட்டடம் நேற்றுத் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

காங்கேசன் ஹாபர்வியூ ஹோட்டல் கட்டடத்தின் முக்கிய பகுதிகள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டன.

நேற்றுப்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அருகில் திஸ்ஸ விகாரை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் முன்னேறி ஹாபர்வியூ ஹோட்டல் கட்டடத்தில் முகாம் அமைக்க முயற்சிப்பதாக தகவல் வெளியானது அதனை அடுத்தே கட்டடத்தின் ஒரு பகுதி குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## காங்கேசனில் யுத்தக் கப்பல் சேதம்
## விடுதலைப்புலிகள் ஐவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற ஸ்ரீலங்கா கடற்படையினரின் யுத்தக் கப்பல் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் றொக்கட் லோஞ்சர் மூலம் தாக்குதல் நடத்தினர். இதனால் அக்கப்பலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுப் பகல் நடைபெற்றது.

கப்பலின் இயந்திர அறை, கம்பியூட்டர் கட்டுப்பாட்டு அறை, ராடர் ஆகியவை சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கைகளின் போது தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் ஐவர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் மேஜர் விவேக் என்ற போராளி எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வவுனியாவில் 15 கடைகள் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

வவுனியா நகரத்திற்குள் புகுந்த இராணுவப் படையினர் அங்கு சுமார் 15 கடைகளை தீ வைத்துக் கொழுத்தினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## யாழ் நகர் வெறிச்சோடியது

யாழ்ப்பாணம், ஜூன் 17

நேற்றுக் காலை கோட்டை இராணுவத்தினருக்கும் – விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சண்டை மூண்டதை அடுத்து யாழ். நகர் வெறிச்சோடியது.

காலையில் திறக்கப்பட்ட கடைகள்அனைத்தும் உடனடியாக இழுத்து மூடப்பட்டன. போக்குவரத்துச் சேவை எதுவும் நடைபெறவில்லை. (இ-9-10)

## காரைநகரிலும் நேற்று மோதல்! ஷெல் வீச்சு!!

யாழ்ப்பாணம், ஜூன் 17

நேற்றுக் காலை முதல் மாலைவரை காரைநகர்க் கடற்படை முகாம் பகுதியில் கடும் மோதல் இடம்பெற்றது.

முகாமைச் சூழவுள்ள பகுதிகளை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஊர்காவற்றுறைப் பகுதியை நோக்கியும் ஷெல் குண்டுகள் வீசப்பட்டன.

காரைநகர் முகாமுக்கு அருகே விழுந்து வெடித்த ஷெல்லில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான் மற்றும் இருவர் காயமடைந்தனர்.

இப் பகுதியில் ஏற்பட்ட இழப்புகள் பற்றிய மேல் விவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

காரைநகர்ப் பகுதியிலிருந்து பொதுமக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

## காங்கேசன் பகுதியிலும் நேற்றுக் கடும் மோதல்

நேற்று அதிகாலை 5 மணிக்கு காங்கேசன்துறை ஹாபர் வியூ ஹோட்டல் திஸ்ஸ விகாரை இராணுவ முகாம் பகுதியில் மோதல் ஆரம்பமானது ஹெலிகொப்டர்களிலிருந்தும், கடலில்நின்ற பீரங்கிப் படகுகளிலிருந்தும் பலத்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஏராளமான குண்டுகள் மக்கள் மக்கள் வாழும் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

பெருமளவில் மக்கள் வெளியேறி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர்.

காங்கேசன்துறை, மாவிட்டபுரம், மயிலிட்டி, கீரிமலை, பலாலி, வசாவிளான், குரும்பசிட்டி உட்பட மற்றும் சுற்றாடல்களிலிருந்தும் மக்கள் வெளியேறினார்கள். (உ-68)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஸ்ரீ ஞானரஞ்சிதம் (ஸ்ரீ) பத்மநாதன்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த திருமதி ஸ்ரீ ஞானரஞ்சிதம் (ஸ்ரீ) பத்மநாதன் 12.6 90 அன்று காலமாகிவிட்டார். இவர் பத்மநாதன்(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் வாழைச்சேனை) அவர்களின் அன்பு மனைவியும், கஜன், சோபிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம் சென்ற டாக்டர் சந்தசாமி, திருமதி விசாலாட்சி (அம்பிகை) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், காலம் சென்ற நடராசா திருமதி அல்லியம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், திருமதி மனோரஞ்சிதம் பாவிதராஜா (சுவிஸ்) சிவரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 17.6 90 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 30 மணியளவில் கொக்குவில் இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றாரும், உறவினரும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ந. கணநாதன் [சபா]

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (13443]

### Dr. சி. சபாரட்ணம்

Dr. சிவகுரு சபாரட்ணம் 16 - 6 - 90 அன்று அகால மரணமானார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், அருந்ததி (U. K ), Dr. விக்னராஜா (U. K ), மகேந்திரராஜா (Australia), தமயந்தி (Canada), மோகனராஜா (Singapoor), ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. திருக்கணேசன், வனஜா, பிரியா, சுசானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற S. கனகரட்ணத்தின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு (17 - 6 - 90) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
—குடும்பத்தினர்

45. வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். [13507]

### தர்மலிங்கம் சின்னத்தங்கம்

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட தர்மலிங்கம் சின்னத்தங்கம் 16. 6 90 இல் காலமானார் இவர் காலம்சென்ற தர்மலிங்கத்தின் அன்புத் துணைவியாரும் பரராசசிங்கம் [JAFFNA TRADERS], காலஞ்சென்ற சண்முகராசா, இராசையா நாகரட்ணம் [டென்மார்க்] ரெட்ணபூபதி, சரோசினிதேவி, ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேசு, செல்லநாயகம்[சுவிற்சலாந்து], கிருஸ்ணவதி, சரஸ்வதி, ஞானாம்பாள், விசயலட்சுமி, ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை, நாகநாதன், நாகம்மை, ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை [17. 6. 90] காலை 10 00 மணிக்கு புங்குடுதீவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மணற்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. பரராசசிங்கம்

1 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. [13444]


## ஆயிரக்கணக்கான மக்கள் பலாலி பகுதியில் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 17

காங்கேசன்துறை, பலாலி, மயிலிட்டி, மாவிட்டபுரம், வீமன்காமம், கட்டுவன், குரும்பசிட்டி, அச்சுவேலிப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள்குடிபெயர்ந்திருந்தனர்.

நேற்றுக்காலை எட்டுமணிக்குப்பின் ஏற்பட்ட அமைதியான சூழ்நிலையை அடுத்து இவர்களில் பலர் தமது இருப்பிடங்களுக்குச் சென்று தமது உடைமைகளை எடுத்து வந்ததை அவதானிக்க முடிந்தது.

பெரும்பாலான மக்கள் தமது கால்நடைகளையும் கொண்டு வந்திருந்தனர். லான்ட்மாஸ்டர்களிலும், லொறிகளிலும் தமது உடைமைகளை பலர் ஏற்றிவந்தனர். தெல்லிப்பழைக்கு அப்பால் நேற்று கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. (இ-3-68)

## யாழ். ஆஸ்பத்திரி நோயாளிகள் பீதியால் வெளியேறினர்

யாழ் பெரியாஸ்பத்திரியிலிருந்து நோயாளர்கள் நேற்று வெளியேறினர்.

நேற்றுக் காலை யாழ். ஆஸ்பத்திரிக்கு அருகிலும் ஷெல்கள் விழுந்ததை அடுத்து நோயாளிகள் அவசர அவசரமாக வெளியேறி கிடைத்த வாகனங்களைப் பிடித்துக் கொண்டு தமது வீடுகளுக்கு விரைந்தனர்.

இதனால் அவசரசிகிச்சை வாட்டுக்களைத் தவிர பெரும்பாலான வாட்டுக்கள் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டன.

எனினும்டாக்டர்களும், தாதிமார்களும் காயம்அடைந்து வருவோரைக் கவனிப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. (இ-10-9)

## சிப்பாய்களுக்கு சிகிச்சையளிக்க டாக்டர் குழு

அம்பாறையில்இடம்பெற்ற மோதல்களில் காயமுற்ற ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காக கண்டியிலிருந்து விசேட டாக்டர் குழு ஒன்று அங்கு விரைந்துசென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## பொம்மர் தாக்குதலில் காயமுற்றோர்

பருத்தித்துறை ஜூன் 17

மயிலிட்டிப் பகுதியில் வெள்ளியன்று இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் காயம் அடைந்தோர் பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

படுகாயம் அடைந்த மயிலிட்டியைச் சேர்ந்த வேதநாயகம் திரேசம்மா (40 வயது) அவசர சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் (இ-118)

## கடலிலிருந்து பீரங்கி தாக்குதல் 50க்கு மேற்பட்ட வீடுகள் சேதம்

நேற்றுக் காலை ஐந்து மணி தொடக்கம் எட்டு மணி வரை மயிலிட்டி, பலாலி, காங்கேசன்துறைப் பகுதிக் கடற் பகுதியில் இருந்து சுமார் மூன்று மணிதகியாலங்கள் பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் கரையோரப் பகுதியில் உள்ள 50க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இதைவிட மாவிட்டபுரம், வீமன்காமம் பகுதிகளைச் சேர்ந்த வீடுகளும் இந்தப் பீரங்கித் தாக்குதல்களுக்கு இலக்காகின.

முகாம்களில் இருந்து ஷெல்கள் வீசப்படாத போதும் ஹெலி வட்டமிட்டு சுட்டதுடன் மோட்டார் ஷெல்களையும் வீசியது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வீதிகளிலும், வீமன்காமம், மயிலிட்டி, காங்கேசன்துறை, கீரிமலை, கருகம்பானை ஆகிய பகுதிகளிலும் ஹெலிச்சூடு இடம்பெற்றது. (இ-68-3(

## கோண்டாவிலில் ஷெல்கள்

நேற்று பலாலியிலிருந்து ஏவப்பட்ட இரண்டு மோட்டார் ஷெல்கள் கோண்டாவில் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

வெறும்வெளியில் வீழ்ந்து வெடித்ததால் பொதுமக்களுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ஒ-69)

## கோட்டைக்குச் சமீபமாக வசித்த பலர் இடம் பெயர்வு

யாழ் நகரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஷெல், ஹெலி தாக்குதல்களை அடுத்து கோட்டையைச் சூழ உள்ள பகுதியில் குடியிருந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்தன.

நேற்றுக் காலை தாக்குதல்கள் ஓய்ந்த போது கால்நடையாகவும், சைக்கிள்களிலும், அகப்பட்ட வாகனங்களிலும் மூட்டை முடிச்சுகளுடன் மக்கள் வெளியேறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

குருநகர் பகுதி மக்கள் பலர் பாஷையூர், புனிதஅந்தோனியார் ஆலயம், பாடசாலைகள், என்பவற்றில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

சிலர் கடல் மார்க்கமாக மண்ணித்தலை, பாலாவி, பள்ளிக்குடாப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். (இ 51)

## பொது அறிவு போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

நாளை திங்கட்கிழமை யாழ். மத்தியகல்லூரியில் நடைபெற இருந்தபொது அறிவுப் போட்டியின் 3 ஆம் சுற்று சில தினங்களுக்கு பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் வெளியிட்டுள்ள ஒரு செய்திக் குறிப்பில்—

மாணவர்கள் இடையே கூட்டுறவையும், புரிந்துணர்வையும், அறிவையும் வளர்க்கும் இத்தகைய போட்டிகள், நிச்சயம் எதிர்காலத்தில் எத்தகைய சூழ்நிலைகளிலும் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## மக்கள் வெளியேறிய வீடுகளில் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 17

மயிலிட்டிப் பகுதியில் இருந்து மக்கள் வெள்ளி இரவு இடம்பெயர்ந்த[illegible] தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

அப்பகுதியில் நிலவிய பதற்றம் காரணமாக பலர் வீடுகளைக்கூடப் பூட்டாமல் ஓடினார்கள். [illegible] பல வீடுகள் சூறையாடப்பட்டிருந்தது தெரியவந்தது.


### நான்காம் ஆண்டு
## கண்ணீர்ப் பூக்கள்

தோற்றம்
26-10-1926

மறைவு
01-07-1986



### அமரர் சி. அழகரட்ணம்
(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
ஆறுமோ எமது உள்ளம்
வேதனைகள் சோதனைகள் தாங்கி
வேகுதையா எமது நெஞ்சம்
பாசமுள்ள மனைவி மக்கள்
பாரினிலே பதறுகின்றோம் உமைநினைந்து

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (3869)

## மரண அறிவித்தல்

### சண்முகம் மாரிமுத்து

நயினாதீவைச் சேர்ந்த சண்முகம்- மாரிமுத்து அவர்கள் காலமானார். இவர் திருமதி கனகம்மாவின் அன்புக் கணவரும், வேதநாதனின், [விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்] தந்தையாரும், புஷ்பராணியின் (ஆசிரியை, கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை ): மாமனாரும், ஸ்ரீவித்யா, ஸ்ரீமனஸா, ஸ்ரீராமன், ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற புவனேஸ்வரி, காலஞ்சென்ற கற்பகம், மனோன்மணி, சரஸ்வதி, மகேஸ்வரி, சுப்பிரமணியம், முத்துலிங்கம், காலஞ்சென்ற சிவரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்,
மா. வேதநாதன்
16. 6. 90

கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
வடக்கு. [13544]



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-06-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org